।। श्रीः ।।



# நூதன நவ நரஸிம்ஹர் ஸந்நிதிகள்
# மஹாஸம்ப்ரோக்ஷண பத்திரிகை
# நைமிஶாரண்யம் (உத்தர அஹோபிலம்)







**குரோதி சித்திரை 5-ம் தேதி முதல் 9-ம் தேதி வரை**

18-04-2024 TO 22-04-2024


**ஶ்ரீ அஹோபில மடம், நைமிஶாரண்யம், சீதாபூர் (DIST) U.P.**

Email : nymisaranyamtrust@gmail.com - Web site :naimisharanyam.org

॥ श्रीः ॥



ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மஹணே நம:
ஸ்ரீமதே பாஷ்யகாராய நம: । ஸ்ரீமதே ஸ்ரீவேதாந்த தேஸிகாய நம:
ஸ்ரீமதாதிவண் ஸடகோப யதீந்த்ர மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்ஸடகோபஸ்ரீ
ஸ்ரீரங்க ஸடகோப யதீந்த்ர மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்ஸடகோபஸ்ரீ வீரராகவ ஸடகோப யதீந்த்ர மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்ஸடகோபஸ்ரீ வேதாந்த தேஸிக யதீந்த்ர மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்ஸடகோபஸ்ரீ
நாரயணயதீந்த்ர மஹாதேஸிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்ஸடகோபஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹாதேஸிகாய நம:

<table>
<tr><td colspan="2">अहोबिले गारुडशैलमध्ये कृपावशात् कल्पितसन्निधानम् ।<br>लक्ष्म्या समालिङ्गितवामभागम् लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये।।</td></tr>
<tr><td>நல்லை நெஞ்சே! நாம் தொழுதும்<br>நம்முடை நம்பெருமான்<br>அல்லிமாதர் புல்க நின்ற<br>ஆயிரம் தோளனிடம்<br>நெல்லி மல்கிக் கல்லுடைப்பப்<br>புல்லிலையார்த்து – அதர்வாய்<br>சில்லு சில்லென்றொல்லறாத<br>சிங்கவேள் குன்றமே.</td><td>நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்<br>நீதியல்லாதன செய்தும்<br>துஞ்சினார் செல்லும் தொன்னெறி கேட்டே<br>துளங்கினேன், விளங்கனி முனிந்தாய்<br>வஞ்சனேன் அடியேன் நெஞ்சினிற்பிரியா<br>வானவா! தானவர்க்கென்றும்<br>நஞ்சனே! வந்துன் திருவடியடைந்தேன்-<br>நைமிசரண்யத்துள்ளெந்தாய்!</td></tr>
</table>

# நூதன நவ நரஸிம்ஹர் ஸந்நிதிகள்
# மஹாஸம்ப்ரோக்ஷண பத்திரிகை
# நைமிஶாரண்யம் (உத்தர அஹோபிலம்)

“வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தை: பாகவதைஸ்ஸஹ” என்கிறபடியே ஸ்ரீவைகுண்ட நிகேதநனான ஸர்வேஶ்வரன் பூலோகத்தில் உள்ளவர்களை ரக்ஷிப்பதற்காக பிராட்டியுடன் யுகந்தோறும் அவதரிக்கிறான் என்பது உலகமறிந்த உண்மை. க்ருதாதி த்வாபரயுகங்களில் ஆஶ்ரிதர்களுடன் கலந்து பரிமாறுகைக்காகவும், அநாஶ்ரிதர்களை தண்டிப்பதற்காகவும் மானுஷரூபேண அவதரிக்கிறான். கலியுகத்தில் அர்ச்சாரூபியாக அவதரித்து ஆச்ரிதர்களுக்கு பவ்யனாக இருந்து ரக்ஷிக்கிறான். அர்ச்சை என்பது பாகவதர்கள் தங்களுக்கு இஷ்டமான பிம்பத்தை ஸுவர்ணாதி லோஹங்களால் நிர்மாணித்து ஆராதிப்பதுதான். ப்ரஹ்லாதன் ஒருவனுக்காக அவதரித்த எம்பெருமான் ந்ருஸிம்ஹன். பிறகு கலியுகத்தில் ராம க்ருஷ்ணாதிகளைப்போல் தன்னையும் ஆராதிக்கவேணும் என்று க்ருபையோடு “தெய்வமல்லால் செல்லவொண்ணா” என்று ஆழ்வார் அனுபவித்தமாதிரி ஸ்ரீ அஹோபிலத்தில் ஒன்பது அர்ச்சாமூர்த்திகளாக அவதரித்து ஸாதுபரித்ராணம் பண்ணுகிறார். அந்த ஒன்பது மூர்த்திகளின் திரு நாமமாவது “ஜ்வால, அஹோபில, மாலோல, க்ரோட, காரஞ்ச்ச, பார்கவ, யோகாநந்த, சத்ரவட, பாவனன்” என்பன. இவர்கள் அங்கு ஒரே இடத்தில் இல்லை. வனத்தில் ஒவ்வொரு இடத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள். ஒரேசமயத்தில் சென்று சேவிக்க முடியாது. ஆகையால் ஸ்ரீ மாலோலன் என்ற ந்ருஸிம்ஹன் “தன்னை பூமியில் எல்லோரும் சேவிக்க வேண்டும் என்று மஹாக்ருபையோடு ஸம்ஸாரபற்றற்ற ஒருவரை (ஸ்ரீமத் ஆதிவண் ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகரை) நியமித்து அவர் கையில் தானே எழுந்தருளி தேசாடனம் பண்ணி தன்னை எல்லோரும் தன்னை ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படி செய்தான். இதை மனதில் கொண்டுதான் ‘த்ரைலோக்யமேததகிலம் நரஸிம்ஹ கர்பம்’ என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். தவிர “ நகச்சித் நாபராத்யதி” என்று தாயார் காப்பதுபோல இருக்க வேண்டும் என்ற அபிப்ராத்தாலே ஸ்ரீமாலோலனாய் எழுந்தருளினபடி. ஆனால் ஸஞ்சாரத்தில் எழுந்தருளினால் மாலோலன்

ஒருவரைத்தான் ஸேவிக்கமுடியுமே தவிர மற்ற 8 ந்ருஸிம்ஹ ரூபங்களை ஸேவிப்பது ஶ்ரமமாக இருக்குமே என்ற எண்ணத்தினால் வனம் என்ற பெயர் போகாமலும், ஸேவிக்க சுலபமாக இருக்கைக்காகவும் நைமிஶாரண்யம் என்ற க்ஷேத்ரத்தில் நவநரஸிம்ஹ ரூபியாய் ஸேவைஸாதிக்க திருவுள்ளம் பற்றி ஸ்ரீமத் அழகியசிங்கர் மூலமாக அந்த கைங்கர்யத்தையும் செய்து முடித்துவிட்டான். மேலும் ஸ்ரீய:பதியான ஸர்வேஶ்வரன் மஹரிஷிகள் தவம் செய்த இடமான நைமிஶாரண்யத்தில் அரண்ய ரூபியாவும் எழுந்தருளியிருக்கிறான். இந்த நவ நரஸிம்ஹர் சன்னதிகளின் ஸம்ப்ரோக்ஷணத்தை ஸ்ரீமத் அழகியசிங்கர் எழுந்தருளி குரோதி வருஷம் சித்திரை மாதம் 5-ம் தேதி (18-04-2024) ஆரம்பித்து சித்திரை மாதம் 9-ம்தேதி (22-04-2024) நடத்த திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. அதின் கார்யக்ரமங்கள் கீழே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அகையால் ஸேவார்த்திகள் வந்து ஸேவித்து யதோசிதம் கைங்கர்யத்தில் அந்வயித்து ஸ்ரீ ந்ருஸிம்ஹர்களுடையவும் ஸ்ரீமத் அழகியசிங்கர்களுடையவும் அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகுமாறு ப்ரார்த்திக்கின்றோம்.

18-02-2024 ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி

சேலையூர் சென்னை ஸ்ரீகார்யம்

பருத்திப்பட்டு வங்கீபுரம் தேவனார் விளாகம் பத்மனாபாசாரியர்

## ஸம்ப்ரோக்ஷண கார்ய க்ரமங்கள்

| நாள் | மணி | கார்ய க்ரமங்கள் |
|---|---|---|
| *18-04-2024* | மாலை *6* | ப்ரதிஷ்டா ஸங்கலபம், ருத்விக்வரணம், விஷ்வக்ஸேநாராதனம், ம்ருத்ஸங்க்ரஹணம், யாகசாலா ப்ரவேசம், த்வார பூஜை, பாலிகா ஸோமகும்பஸ்தாபனம், அங்குரஹோமம், அங்குரார்பணம், நிவேதனம், பீஜாவாபம், பலிஸாதித்தல் |
| *19-04-2024* | காலை *8* | த்வார பூஜை, ஸோமகும்பாராதனம், தேவாலயமார்ஜனம், பர்யக்நிகரணம், பஞ்சகவ்ய ப்ரோக்ஷணம், மார்ஜனம், புண்யாஹ தீர்த்த ப்ரோக்ஷணம், ப்ரதிமாச்சாதனம், மாநோந்மாந சாந்திஹோமம், |
| | மாலை *6* | த்வார பூஜை, ரக்ஷாபந்தனம், சயாதி வாஸம், ஜலாதி வாஸம், கும்ப மண்டல ஸ்தாபனம் |
| *20-04-2024* | காலை *8* | வாஸ்து ஹோமம், சதுஸ்தாநார்ச்சனம், ஜலாதிவாஸம், ஹோமம், பூர்ணாஹுதி |
| | மாலை *3* | மூலவர்களுக்கு *9* கலச திருமஞ்ஜனம், நயநோந்மீலநம் சதுஸ்தாநார்ச்சனம், ஹோமம், பூர்ணாஹுதி |
| *21-04-2024* | காலை *8* | சதுஸ்தானார்ச்சனம், ஹோமம், பூர்ணாஹுதி |
| | மாலை *3* | உத்ஸவர் பெருமாளுக்கு *17* கலச திருமஞ்ஜனம், கோதோஹனம், சதுஸ்தாநார்ச்சனம், நித்யஹோமம், தத்வ ஹோமம், ஸஜீவகரணம், ப்ராயஶ்சித்த ஹோமம், பூர்ணாஹுதி, சயனாதிவாசம் |
| *22-04-2024* | காலை *7* | விச்வரூபம், ஸ்துஸ்தாநார்சனம், ஹோமம், பூர்ணாஹுதி, பலிஸாதித்தல், பலியுத்வாஸனம், அக்னி உபகும்ப ஸோமகும்ப மண்டல உத்வாஸனம், |
| | காலை *9.30 -10.30* | க்ருஹப்ரீதி, யாத்ராதானம், பிம்ப கும்பங்களை எழுந்தருளப்பண்ணுதல், த்வாரதேசே த்ருஷ்டிபரிஹாரம் செய்து கர்பக்ருஹத்திற்கு எழுந்தருளப்பண்ணுதல், கும்பப்ரோக்ஷணம், |
| | *10.30 -11.30* | மந்த்ர புஷ்பம், ரக்ஷாஸூத்ர விசர்ஜனம், மஹாஹவிர் நிவேதனம், சாற்றுமுறை |
| | மாலை 4 | கல்யாண உத்ஸவம் |
| | மாலை 6 | வீதி புறப்பாடு |

## உபயங்களின் விபரம்

| உபயம் | ரூ | உபயம் | ரூ |
|---|---|---|---|
| ஹோம குண்டம் ஒன்றுக்கு எல்லா நாளுக்கும் | *100000* | ஹோம குண்டம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு | *25000* |
| விமானம் / கோபுரம் கலசம் ஒன்றுக்கு | *50000* | கும்பங்கள் ஒன்றுக்கு | *10000* |
| திருமஞ்சனம் மூலவர் | *10000* | திருமஞ்சனம் உத்ஸவர் | *5000* |
| யாகசாலை கலசங்கள் | *1000* | ஹோமம் | *5000* |
| ஸந்நிதி பாத்ரங்கள் | *15000* | பாராயணம் | *10000* |
| ப்ரஸாதம் | *10000* | புஷ்பங்கள் | *5000* |

NOTE: FOR ANY MAJOR DONATION INCLUDING FOR CONSTRUCTION CONTACT 9867550318

## உபயம் / நன்கொடை செலுத்த பாங்க் அகௌண்ட் விபரம்

| TYPE | BANK DETAIL |
|---|---|
| DONORS FROM INDIA | IN FAVOUR OF " NYMISARNAYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST"<br>CURRENT ACOUNT NO. 36706751438<br>IFSCODE : SBIN0002190<br>STATE BANK OF INDIA<br>ALWARPET BRANCH, CHENNAI 600018 |
| DONORS FROM ABROAD | IN FAVOUR OF " NYMISARNAYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST"<br>SAVINGS ACOUNT NO. 40220924795<br>IFSCODE : SBIN0000691<br>STATE BANK OF INDIA<br>MAIN BRANCH<br>PARLIAMENT STREET, NEW DELHI 110001 |
| UPI PAYMENTS | **Merchant Name / Business Name: NYMISH CHARITABLE**<br>**QR Code for nymishtrust@mahb**<br>बैंक ऑफ महाराष्ट्र<br>Bank of Maharashtra<br>भारत सरकार का उद्यम<br>एक परिवार एक बैंक |
| CASH / CHEQUES / DDS | TO BE SENT TO OR GIVEN DIRECTLY AT<br>SRI AHOBILA MUTT, SELAIYUR<br>SRI NARASIMHAPRIYA OFFICE<br>SRI AHOBILA MUTT, NAIMISHARANYAM |

DONORS ARE REQUESTED TO SEND DONATION DETAIL, ADDRESS AND PAN NO. TO 9867550318 OR BY EMAIL TO nymisaranyamtrust@gmail.com FOR ISSUING RECEIPT. ALL DONATIONS ARE ELIGIBLE FOR RELIEEF UNDER SETION 80G OF THE INCOME-TAX ACT.

ஸம்ப்ரோக்ஷண உத்ஸ்வத்தில் பங்குகொள்ளும் ஸேவார்த்திகள் தொடர்புக்கு

1. தங்கும் AC, NON-A/C ரூம்கள் தேவைக்கு:– ஸ்ரீமதி வினியா நரஸிம்ஹன் – 9936040748, 9935126281.
2. TAXI SERVICES – FROM AIR PORT, RAILWAY STATION:- ஸ்ரீமதி வினியா நரஸிம்ஹன் – 9936040748, 9935126281.
3. FOR DONATIONS AND SPONSORSHIPS : ஸ்ரீ ஸாரநாதன் – 9867550318, 9867550316 nymisaranyamtrust@gmail.com
4. FOR QUERIES AND INFORMATION: ஸ்ரீ ஜெயஸ்ரீ விஜயகுமார் – 9946032717